சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

எதிரிக்கும் எனக்கும் முன்விரோதம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் அரசு வேலைப் பார்த்து ஓய்வுபெற்றுள்ளேன். எனக்கு சம்பவம் நடக்கும் போது 68 வயது ஆனது. சம்பவயிடத்திற்கும் மண்டைக்காடு காவல்நிலையத்திற்கும் ஒரு ப்ர்லாங் தூரம் இருக்கும். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் இடமான லட்சுமிபுரம் கல்லூரிக்கு தெற்கு பக்கம் குளச்சல் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட மெயின் ரோடு என்றால் குளச்சல் மற்றும் மண்டைக்காடு காவல்நிலையத்திற்கு பொதுவான எல்கை பகுதியில் சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மண்டைக்காடு காவல்நிலையத்திற்கு 5 நிமிடத்தில் நடந்து சென்றுவிடலாம். நானும் எனது மகனும் படிப்பறிவுள்ள நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதும் நான் காவல்நிலையத்திற்கு தகவல் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து கல்லுக்கூட்டத்தில் கிரேஸ் என்ற மருத்துவமனை உண்டு என்றால் எனக்குத் தெரியாது. மண்டைக்காட்டில் இரண்டு மருத்துவமனைகள் உண்டு என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகில் இரண்டு மருத்துவமனைகள் இருந்தும் நான் முதலுதவி சிகிட்சை பெறுவதற்கு அங்கு செல்லவில்லை என்றால் எனது குடும்பத்தில் உள்ளவர்களை வீட்டில் இறக்கிவிட்டு விட்டு பின்னர் குளச்சல் மருத்துவமனைக்கு சென்றோம். காவல்நிலையம் சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த போதிலும் நான் முதலில் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எனக்கு சம்பவத்தில் பல்லில் அடிபட்டு இரத்தம் வடிந்துக்கொண்டிருந்தால் நான் உடனே மருத்துவமனை சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. இரத்தக்கறை பட்ட துணிகளை நான் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் போலீசார் கேட்காததால் நான் கொடுக்கவில்லை. உண்மையிலேயே சம்பவத்தில் எனது துணியில் இரத்தக்கறை பட்டிருந்தால் நான் அதை போலீசாரிடம் ஆஜர்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. பொதுவாக இரவு 10.00 மணிக்கு ரோட்டில் ஆட்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் என்றால் தீபாவளி பண்டிகை இருந்த காரணத்தினால் ஓரளவு மக்கள் நடமாட்டம் இருந்தது. பொதுவாக கார் இருசக்கர வாகனத்தை விட வேகமாக செல்லக்கூடியது என்றால் அது ஓட்டக்கூடிய வேகத்தைப் பொறுத்தது. எதிரி சம்பவத்தின் போது ஓட்டிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் நான் பின்பக்க இருக்கையில் அமர்ந்திருந்ததால் எனக்குத் தெரியாது. எந்த ரக இருசக்கர வாகனத்தை எதிரி ஓட்டி வந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் பின் இருக்கையில் அமர்ந்திருந்த காரணத்தினால் எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி விவசாயம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் போலீசாரிடம் அளித்த புகார் மனுவில் சத்தியசீலன் என்பவரையும் இந்த வழக்கில் எதிரியாக காண்பித்துள்ளேன் என்றால் நான் பதட்டத்தில் தெரியாமல் கூறிவிட்டேன். உண்மையிலே என்னை ஒரு நபர் சம்பவத்தின் போது கல்லை தூக்கி எறிய வந்தார். அந்த நபர் யார் என்று தெரியாது. ஆனால் போலீசார் அந்த நபரை பற்றி சரியாக விசாரிக்கவில்லை. நான் பின்னார் என்னை கல்லைத்தூக்கி எறிய வந்த நபர்

செல்வமணி என்பவர் மகன் ராதா என்று தெரிய வந்ததால் நான் காவல்நிலையத்தில் அது பற்றி விசாரிக்க ஒரு மனு அளித்திருந்தேன். போலீசார் எடுத்த நடவடிக்கை குறித்து எனக்கு தெரியாது. போலீசார் மேற்படி நான் மனு அளித்ததற்கு மனு ரசீது எதுவும் தரவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கற்பனையாக வழக்கு சம்பவத்தைக் கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது புகார் மனுவில் உண்மையில்லை என்ற காரணத்தினால் தான் போலீசார் இந்த வழக்கின் ஒரு நபரை நீக்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் எனது மகனின் அருகில் சம்பவத்தின் போது உட்காரவில்லை என்றால் சரிதான். எனது மகன் வாகனத்தை ஓட்டும் போது எனது மருமகள் வாகனத்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தார். எனது மருமகளுக்கு சம்பவத்தின் போது எந்த காயமும் இல்லை என்றால் மருமகளை அடிக்கவில்லை. பொதுவாக கணவரை அடித்தால் மனைவி தடுத்திருப்பார்கள் என்றாலும் நான் கற்பனையாக கதை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பின் இருக்கையில் இருந்ததால் என்னால் கையை நீட்டி சம்பவத்தை தடுக்க இயலாது என்றால் சரியல்ல. நான் தடுத்தேன். நான் எனது புகார் மனுவில் சம்பவத்தின் போது எனக்கு ஒரு பல் உடைந்தது என்று தான் சொல்லியுள்ளேன். பொதுவாக ஒரு நபர் கைவிரல்களை மடக்கிக்கொண்டு குத்தும் போது உதடுகளிலும் காயம் ஏற்படும் என்றாலும், ஒரு பல் மட்டும் விழுவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. நான் உடைந்த பல்லை மருத்துவரிடம் காண்பித்தேன். நான் உடைந்த பல்லை மருத்துவரிடம் காண்பித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புலன்விசாரணை அதிகாரியிடம் பல்லைக் கொடுக்கவில்லை, அவர்கள் பார்த்தார்கள். நான் இந்த வழக்கு விசாரணைக்காக காவல்நிலையம் ஒரு நாளும் சென்றதில்லை. பொதுவாக 68 வயதில் பற்கள் அனைத்தும் காணப்படாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின் போது 6,7 நபர்கள் ஓடி வந்தார்கள். மேற்படி நபர்களை சாட்சிகளான இவ்வழக்கில் போடவில்லை என்றால் அது போலீசாருக்குத் தான் தெரியும். அ.சா3 எனக்கு தூரத்து உறவினர். சாட்சி ஜெகன் சந்திரகுமார் எனக்கு உறவினர் அல்ல. சாட்சிகள் மகேஸ்வரி, ஜெகன் சந்திரகுமார் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. எதிரிமீது எனது மகன் ஓட்டி வந்த கார் இடித்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டதால் அவர் விபத்து வழக்கு தாக்கல் செய்து விடுவார் என்று பயந்து நான் அவர் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சிகிட்சை அளித்த குளச்சல் அரசு மருத்துவர் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல. பல வருடங்களுக்கு முன்பு விழுந்த எனது பல்லை பயன்படுத்தி மருத்துவ சான்றிதழை வைத்தும் நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முகத்தில் காயம் இருந்ததாக நான் புகாரில் கூறியுள்ளேன். எனது மகனை எந்த மருத்துவமனையிலும் நான் அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது மகனுக்கு சம்பவத்தின் போது அடிபட்டிருந்தால் அவர் மருத்துவ சிகிட்சைப் பெற்றிருப்பார் என்றால் நாட்டு மருத்துவம் பார்த்தார். அ.சா.3க்கும் எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தை பயன்படுத்தி அவர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எனது மகன் காரை அதிவேகமாக ஓட்டியதில் விபத்து

ஏற்பட்டு அதற்காக எதிரி சிகிட்சைப் பெற்றார் என்றால் சரியல்ல. சம்பவயிடம் குளச்சல் காவல்நிலைய எல்கைக்குட்பட்டது என்றாலும்  மண்டைக்காடு போலீசாரால் பதிவுச் செய்யப்பட்ட இந்த வழக்கு அதிகார வரம்பு இல்லாததால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் மண்டைக்காடு போலீசாரை சுவாதீனப்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்ய செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  நான் இரண்டு நாட்களுக்கு முன்பு மண்டைக்காடு காவல்நிலையத்தில் ஒரு புகார் மனு அளித்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.  எனக்கு யார் மீதாவது புகார் அளித்து அவர்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் உண்டு என்றால் சரியல்ல.  நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி விபத்து நஷ்டயீடு வழக்கு தாக்கல் செய்துவிடுவார் என்ற பயத்தில் நான் பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

அ.சா1 எனது தாய் மாமாவின் மகளின் கணவர். எனது கணவர் கூலி வேலைச் செய்து வருகிறார். எங்களது வீட்டில் தற்போது தான் நாங்கள் இருசக்கர வாகனம் வாங்கியுள்ளோம். சம்பவத்தின் போது அ.சா1ன் மகன் ஓட்டி வந்த காரின் பதிவெண் மற்றும் மாடல் எனக்குத் தெரியாது. சம்பவத்தை நான் 10 அடி தூரத்தில் நின்றுப் பார்த்தேன். காருக்குள் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் 10 அடி தூரத்தில் நின்றதால் எனக்கு காருக்குள் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் அடி நடந்தது. எதிரி எந்த மாடல் கொண்ட வாகனத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒரு சிறிய இருசக்கர வாகனத்தில் வந்தார். அது ஸ்கூட்டியை விட சின்ன வண்டியாகும். நான் காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக செல்லவில்லை. போலீசார் எனது வீட்டிற்கு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். ஒரு கையொப்பம் பெற்றார்கள். போலீசார் சம்பவம் நடந்ததை பார்த்தீர்களா என்று கேட்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அ.சா1 எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1ன் மகன் ஓட்டிய கார் பட்டு எதிரி கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் பிறகு அ.சா1 மருத்துவமனை சென்றார். கண்ணன் பைனான்ஸ் உரிமையாளரின் வீட்டின் முன்பு வைத்து சம்பவம் நடைபெற்றது. கண்ணன் பைனான்ஸ் ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது. சம்பவயிடத்தின் அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எதிரி வண்டியை வளைந்து நெளிந்து ஓட்டினார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1ன் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அவருக்கு வண்டி ஓட்டத் தெரியாததாலும் தான் இந்த சம்பவம் நடைபெற்றது என்றாலும் சரியல்ல. எனது வீட்டிற்கும் சம்பவயிடத்திற்கும் அரை கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவத்தின் போது மற்றொருவர் இருசக்கர வாகனத்தில் இரவு 10.00 மணி அளவில் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும் போது என்னிடம் கைபேசி இல்லை. கைக்கடிகாரமும் இல்லை. நான் எதிரியிடமிருந்து 2 இலட்சம் கடன் வாங்கி திருப்பி கொடுக்காததால் அவருக்கும் எனக்கும் பிரச்சினை ஏற்பட்டதால் நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும், குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்திருப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது சம்பவம் நடந்த உடனே அ.சா1 பல்லை எடுத்துக் காண்பித்தார். அதை அனைவரும் பார்த்தார்கள். நான் எனது உறவினருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.